பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 22 வியாழக்கிழமை 07.08.2025 கதிர் 271

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசுத் தலைவர் அநுர குமாரவிற்கும்தமிழ்மற்றும்முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று சந்திப்பு ☞ 2

## மின்சாரத் திருத்தச் சட்டம் நேற்று நிறைவேற்றம்

இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலம் 96 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு ஆதரவாக 121வாக்குகளும் எதிராக 25வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்றது. சட்டமூலம் மீதான விவாதம் காலை முதல் மாலை 5.30 மணி வரை இம்பெற்று முடிந்த நிலையில் சட்டமூலத்தை அனுமதித்துக்கொள்ள வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலத்திற்கு ஆதரவாக ☞ 6

# சுயாதீனமான, நியாயமான பொறுப்புக்கூறல் வழிகளை ஏற்படுத்த இலங்கை தவறிவிட்டது

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

இலங்கையில் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இதுவரை சுயாதீனமான வலுவான நியாயமான பொறுப்புக்கூறும் பொறிமுறைகளை ஏற்படுத்த தவறிவிட்டனர் பொதுமக்களினதும்சர்வதேசசமூகத்தினதும் நம்பிக்கையை பெறக்கூடிய உண்மை நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான முழுமையான செயல்முறையை முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பிடம் நான் கேட்டுக்கொண்டேன் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகத்தினரும் மதத்தலைவர்களும் ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைஆணையாளருக்கும் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளிற்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும் அனுப்பிவைத்த கடிதத்திற்கு பதில் கடிதத்தை எழுதியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கர் டேர்க் இதனைத் தெரிவித்துள்ளார். ☞ 2

# சம்பூரில் மனித எச்சங்களை அறிய இராணுவ உதவியை பெற உத்தரவு

## கட்டளைத் தளபதியின் ஆலோசனையை பெறவும் மூதூர் நீதிவான் தஸ்னீம் அறிவுறுத்து

மனிதஎலும்புஎச்சங்கள்காணப்பட்ட சம்பூர் காணியில் மேலும் மனித எலும்புக்கூடுகள், மற்றும் எச்சங்கள் உள்ளனவாஎன்பதைஅறியஅகழ்வுகள் கிழக்குபிராந்தியஇராணுவகட்டளைத் தளபதியின் ஆலோசனையை பெற்று இராணுவ பாதுகாப்பு ஆளணியின் உதவியுடன் முறைப்படி நடத்தப்பட வேண்டும் என்றும் மூதூர் நீதிவான் தஸ்னீம் உத்தரவிட்டுள்ளார். மேலும் இவ்வழக்கு விசாரணையை ஜூலை 26 தொடர்ந்தும் நடத்துவது என்றும் நீதிமன்று தீர்மானித்தது.

சம்பூர்காணியில்கண்டெடுக்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று 25 வயதிற்குகுறைந்தஆண்ஒருவருடையது என்றும் மற்றையது 25 இற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவருடையது, அடுத்தது 40 இற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட ஒருவருடையது என்றும் வழக்கு மாநாட்டின் போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை முன்வைத்தார்.

வழக்கு மாநாட்டில் சட்டவைத்திய அதிகாரி கூறுகையில்,

இந்த இடம் மயானம் என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் ☞ 2

# செம்மணியில் சிசுவின் எலும்பு எச்சங்கள் மீட்பு

### நேற்றும் 6 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் 150ஐ நெருங்குகின்றது மொத்த எண்ணிக்கை



செம்மணி மனித புதைகுழியின், அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் இருந்து சிசு ஒன்றின் எலும்பு எச்சங்கள் நேற்று யாழ். நீதிவான் ஆனந்தராஜா ☞ 2

# பயங்கரவாத் தடைச் சட்டத்தை முழுமையாக அகற்றவேண்டும்

### கோடீஸ்வரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

தமிழின அழிப்புக்கு ஆயுதமாகவிருந்த பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.இந்தச் சட்டத்துக்கு மாறாக பிறிதொரு சட்டம் இயற்றப்பட கூடாது.மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜேவீரவை கொலை செய்ய பயன்படுத்திய இந்த சட்டத்தை இந்நாள்தலைவர் அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க நீக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். கடந்த அரசாங்கங்கள் அனைத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு அச்சட்டத்தையே செயற்படுத்தின. இதனால் பாரிய ☞ 6

# அக்கரைப்பற்று சுனாமி வீட்டுத் திட்டத்தை உரியோரிடம் கையளிக்க நடவடிக்கை தேவை

### மஸ்தான் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

கிழக்கில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவூதி அரேபிய அரசால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் இருக்கின்றன. நீண்ட காலமாக இழுபறி நிலையில் உள்ள இந்த விவகாரத்தில் உடனடி கவனம் செலுத்தி, நாடாளுமன்ற குழு ஒன்றை அமைத்தாவது, அது தொடர்பில் ஆராய்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த வீடுகளை கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞ 6

# இஸ்ரேலின் கொலைக் குற்றவாளிகள் மன அமைதிக்காக இலங்கை வருகை

### மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

பொத்துவில் அருகம்பை பிரதேசத்தில் இருக்கும் காணிகள் இஸ்ரேலுக்கு உரித்தாகி வருவதன் மூலம் இலங்கை இஸ்ரேலின் கொலணியாகியுள்ளது. இஸ்ரேல் இராணுவத்தில் இருக்கும் கொலைக் குற்றவாளிகள் மன ஆறுதல் பெறுவதற்கு இலங்கைக்கு வருகிறார்கள். இவர்களுக்கு ஆளும்தரப்பு தற்போது இலவச விசா வழங்குகிறது என மரிக்கார் குற்றம்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில்நேற்று இடம்பெற்ற இலங்கை மின்சாரம்(திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2 தெரிவித்ததாவது:

# கனிய மணல் அகழ்வை எதிர்த்து மன்னாரில் நேற்றுப் போராட்டம்

மன்னார் மாவட்டத்தில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிய மணல் சுரண்டல்களினால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பூர்வீக நிலங்கள் அழிவடையும் அபாயம் காணப்படுகின்ற நிலையில் குறித்த நடவடிக்கைகளை கண்டித்து, மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த விழிப்புணர்வுபோராட்டம் நேற்று புதன்கிழமை (06) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

'மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் ☞ 2

# சாகலவிடம் சிஐடியினர் 6 மணி நேரம் விசாரணை

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிக்குழாம் பிரதானியாகக் கடமையாற்றிய சாகல ரத்நாயக்கவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் (சிஐடி) 06 மணித்தியாலங்களுக்கும் அதிகமான காலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக சொத்துக்களை ஈட்டியதாகக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகளுக்காக அவர் நேற்று ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

# ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்காக உண்மையாகவே உழைக்கின்றோம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

நாட்டில் ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்ய ஆளும்தரப்பு உண்மையாகவே முயற்சிக்கின்றது.தவிர,இந்தநடவடிக்கைகளின் மூலம்ஆளுமையைஉயர்த்திக்கொள்வதற்காக அல்ல. எமது ஆளும்தரப்பில் யாராவது ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்போம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை பிரதமரிடமானகேள்விநேரத்தில்ஐக்கியமக்கள் சக்தி உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

'கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி, சீனி மோசடி மற்றும் தேங்காய் எண்ணெய் மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதேநேரம், ஆளும்தரப்புக்கடந்தகாலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுபோன்று, இந்த ஆளும்தரப்பில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் உண்மையாக விசாரணை மேற்கொள்ளுமா?

குறிப்பாக கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடிக்குச் சமமாக இந்த ஆளும்தரப்பில் உப்பு மோசடி இடம்பெற்றுள்ளது. அதேபோன்று சீனி மோசடிக்குச் சமமாக கொள்கலன்களைச் சோதனையின்றி விடுவித்த மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே இந்த மோசடிகள் தொடர்பிலும் ஆளும்தரப்பு முறையான விசாரணைமேற்கொள்ளுமாஎனகேட்கிறேன்' என்று சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பினார்.

பிரதமர் அதற்களித்த பதிலில் தெரிவித்ததாவது:

எமது ஆளும்தரப்பு ஊழல் மோசடிகள் தொடர்பில் உண்மையாகவே விசாரணைகளைநடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனையைபெற்றுக்கொடுக்கநடவடிக்கை எடுத்துவருகிறது. இதன்மூலம்ஆளும்தரப்பின் மதிப்பை உயர்த்திக்கொள்ள நாங்கள் முயற்சிக்கவில்லை. அவ்வாறு நாங்கள் செயற்படுவதாகத் தெரிவிப்பதை முற்றாக நிராகரிக்கிறோம்.

அதேநேரம்கடந்தகாலங்களில்இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுடன் எமது ஆட்சிக் காலத்தில் அவ்வாறு மோசடிகள் இடம்பெற்றால், அவை தொடர்பாகவும்விசாரணைமேற்கொள்வோம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. நாட்டுக்குள் ஊழல் எதிர்ப்பு கலாசாரம் ஒன்றை ஏற்படுத்தும் உண்மையான முயற்சியையே தற்போது மேற்கொள்கிறோம்.

இந்த முயற்சியிலும் பிழையான நடவடிக்கைகள் இடம்பெறுமாக இருந்தால், அவர்களுக்கு எதிராகவும் செயற்பட்டு, அந்தத திருடர்களையும் கண்டுபிடிப்போம். அதில் எந்தச் சந்தேகமும் வைத்துக்கொள்ள வேண்டாம் - என்றார்.

## இனி இது .....

ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

வடக்குகிழக்கைச்சேர்ந்ததமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரின் அவசர வேண்டுகோளிற்கு அமைவாக இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார்மாவட்டத்தில்அமைக்கப்பட்டுள்ள காற்றாலைமின்கோபுரங்களின்எண்ணிக்கை அதிகரிக்கப்படுவது தொடர்பிலும் இல்மனைற் மணல்அகழ்வுதொடர்பிலும்ஆராய்வதற்காக இந்தச் சந்திப்பிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுத் தலைவரிடம் நேரம் கேட்டிருந்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று மதியம் 2 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தவிர, சிவில்அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. மன்னார் காற்றாலையுடன்தொடர்புடையதிணைக்கள அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் ஏற்கனவே காற்றாலைகள் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், அதனைப் பொருட்படுத்தாமல் அவை அமைக்கப்பட்டன. தற்போது அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அடுத்த கட்ட வேலைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கும் அங்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மூன்று நாட்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனாலும், அந்த எதிர்ப்புக்களைக் கண்டுகொள்ளாமல் காற்றாலைகள் அமைப்பதற்கான உபகரணங்கள் மற்றும் காற்றாலைப்பாகங்கள் கனரகவாகனங்களில் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மன்னாருக்குக்கொண்டுவந்து சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதாவது நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பாக சந்திப்பு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, மன்னாரில் காற்றாலைகள் பொருத்தும் பணிகள் நடந்துகொண்டிருக்கும். மக்களின்எதிர்ப்புக்காக அதனை இடைநிறுத்தி சந்திப்பு நடத்தும் துணிச்சலோ உறுதியோ அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்குக் கிடையாது. அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சிவில் அமைப்புக்களின்தலைவர்களையும்ஒப்புக்குச் சந்தித்தாலும் களத்தில் காற்றாலைப் பணிகள் தொடரும் என்பதே யதார்த்தம்.

ஆட்சிக்கு வரும் முன்னர் மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கும் கனிய மணல் அகழ்விற்கும் தடைவிதிப்போம் என்றும் அநுரவும் தேசிய மக்கள் சக்தியும் வாக்குறுதியளித்தன. அதன் காரணமாகவே அதானியின் நிறுவனம் மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கான அனுமதியை இந்த ஆளும்தரப்பு தாமதப்படுத்தியது என்றும் அதனால் அதானி நிறுவனம் இந்தத் திட்டத்திலிருந்து விலகியது என்றும் சொல்லப்பட்டாலும் தற்போதும் மன்னாரில் காற்றாலைகள் அமைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

மிக ஒடுங்கிய நிலப்பரப்பைக் கொண்ட மன்னாரில் கரையோரங்கள் முழுவதும் தீவின் நடுப் பகுதியிலும் காற்றாலைகள் அமைக்கப்படுவது மக்களுக்குத் தொல்லை தருவதாக இருப்பதுடன் மன்னாரில் முக்கிய தொழில்களில் ஒன்றான மீன்பிடிக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக மக்கள் முறைப்படுகிறார்கள். ஆனால் டொலர்கள் எங்கிருந்து விழும் என வாயைப் பிளந்துகொண்டுநிற்கும்அரசுகளுக்குஅபலை மக்களின் இந்த அழுகுரல் கேட்பதற்கான வாய்ப்புக்கள் பெருமளவில் இல்லை.

இன்றைய சந்திப்பில், தற்போது அமைக்கப்படும் காற்றாலைகள் ஏற்கனவே ரணில் ஆட்சியின்போது ஒப்பந்தம் வழங்கப்பட்டவை என்பதால் தம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற விளக்கத்திற்குமேல் அரசுத் தலைவர் சொல்வதற்கு ஒன்றும் இருக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சம்பூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்படவில்லை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட மனித எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எச்சங்களுக்குரியவர்கள் இயற்கையாக இறந்தார்களா? அல்லது ஏதேனும் குற்றச்செயல்கள் மூலம் மரணம் நிகழ்ந்ததா? என்பதை கண்டறிய மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

இக்காணி அரச காணியாக உள்ளபோதும் இங்கு ஒரு மயானம் இருந்ததற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று இம்மாநாட்டில் தொல்பொருள் திணைக்களம், பிரதேச செயலக செயலாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் அறிக்கை முன்வைக்கப்பட்டது. இவ் அறிக்கைகளை ஆராய்த பின்னரே நீதிமன்று அகழ்வு செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது.

வழக்கு மாநாட்டில் மாவட்ட சட்டவைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்கழக அதிகாரி, புவிசரிதவியல்த்துறை அதிகாரி, பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர், தேசிய கண்ணிவெடி அகற்றம் நிறுவனத்தினர், மெக் மிதி வெடி அகற்றும் நிறுவனத்தினர், பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், காணாமல் போனோர் தேசிய செயலகத்தின் சட்டத்தரணி, பிரதேச காணி உத்தியோகத்தர், பிரிவிற்கான கிராம சேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செம்மணியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் அகழ்ந்து எடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டாம் கட்ட அகழ்வுகளின் இரண்டாம் பகுதிப் பணிகள் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டன.

இதுவரையில் சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழிகளில் இருந்து சிறுவர்கள், சிசுக்கள் உள்ளிட்ட 147 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 140 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்த 16 நாட்களாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்றுத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. ஓகஸ்ட் 21 மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின் போது 6 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 10 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் ஓகஸ்ட் 14 செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளது. அன்றைய தினம் ஸ்கான் ஆய்வு அறிக்கை மற்றும் மண் பரிசோதனை அறிக்கை என்பவை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சுயாதீனமான,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனது இலங்கை பயணம் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் எதிர்வரும் 60ஆவது அமர்வு குறித்தும் ஜூலை 14, ஓகஸ்ட் 4 என நீங்கள் அனுப்பிய கடிதங்களிற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது பயணத்தின்போது உங்களில் சிலரைச் சந்திக்க முடிந்தமை குறித்தும் எனது பயணத்தின் முன்னரும் பின்னரும் சிவில் சமூகத்திடமிருந்து கிடைம் பல மனுக்கள் மற்றும் கடிதங்கள் குறித்தும் நான் நன்றியுடையவனாக உள்ளேன்.

கடந்தகால தற்போதைய மனித உரிமை மீறல்களிற்கான சர்வதேச குற்றங்களிற்கான பொறுப்புக்கூறல் எனது பயணத்தின் முக்கிய நோக்கமாகவும் ஆளும்தரப்புடனான பேச்சுக்களில் முக்கிய விடயமாகவும் காணப்பட்டது. முன்னோக்கி செல்லும்போது இது தொடரும்.

எனது பயணத்தின்போது எனது அலுவலகத்தின் முன்னைய அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கரிசனைகளை வலியுறுத்தினேன். இதன்போது இராணுவத்தினரின் பிடியில் உள்ள நிலங்களை விடுவித்தலின் அவசியம், வடக்கு கிழக்கில் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்துவைத்திருப்பவர்களை விடுதலை செய்தல், கண்காணிப்பு துன்புறுத்தலை முடிவிற்கு கொண்டுவருதல், பொதுமக்களின் நினைவுகூரும் நடவடிக்கைகளை குற்றமாக கருதுவதை விடுத்து அதற்கு ஆதரவளித்தல் போன்றவற்றையும் வலியுறுத்தினேன்.

இந்த விடயங்களிற்கு தீர்வை காண்பது பாதிக்கப்பட்ட மக்கள் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மிக முக்கியமான ஒரு நடவடிக்கையாகும்.

எனது பயணத்தின்போது பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் பலருடனான தனது சந்திப்பு மிகவும் உணர்வூர்வமானதாககாணப்பட்டதுசெம்மணி மனித புதைகுழிக்கான எனது பயணமும் பாதிக்கப்பட்டவர்கள் சட்டத்தரணிகளை சந்தித்தமை அந்த பகுதியில் இடம்பெற்றபெரும் நினைவுகூரலை பார்வையிட்டமையும் மிகவும் உணர்வுபூர்வமானதாகக் காணப்பட்டது

என்னுடைய இந்தப் பயணங்கள் மனித புதைகுழிகள், பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் ஆதாரங்களை பேணவேண்டியது, சுயாதீன விசாரணை குறித்து கவனத்தை திருப்பியுள்ளதுடன் அவசரத் தன்மையை கொடுத்துள்ளன.

இலங்கையில் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இதுவரை சுயாதீனமான வலுவான நியாயமான பொறுப்புக்கூறும் பொறிமுறைகளை ஏற்படுத்த தவறிவிட்டனர் பொதுமக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை பெறக்கூடிய உண்மை நீதி மற்றும்பொறுப்புக்கூறலிற்கானமுழுமையான செயல்முறையை முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பிடம் நான் கேட்டுக்கொண்டேன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான எனது எதிர்வரும் அறிக்கை உங்களின் கரிசனைகளை பிரதிபலிக்கும் விதத்தில்காணப்படுவதைநீங்கள்காண்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது.

## இஸ்ரேலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜேவிபி எதிர்க்கட்சியில் இருக்கும்போது பலஸ்தீனுக்குஆதரவுதெரிவித்து, இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்க தூதரகத்துக்கு முன்னாலும் வேறு இடங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தது. ஆனால் இன்று இரண்டுமூன்றுகொள்கைகளைகடைப்பிடித்த வருகிறது.

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் இருக்கும் காணிகள் இஸ்ரேலுக்கு உரித்தாகி வருகின்றன. அந்த பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தின் மனித கொலைகாரர்கள், போர்க்குற்றம் இளைத்தவர்கள் மன ஆறுதல் அடைவதற்கு இங்கு வருகிறார்கள். அந்தபகுதியில் ஹோட்டல்களை அமைத்துக்கொண்டு, இலங்கையர்களுக்கு செல்ல முடியாது. வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் ஆளும்தரப்பு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. நாட்டுப்பற்று தொடர்பில் கதைத்து ஆட்சிக்கு வந்த இந்த ஆளும்தரப்பு தற்போது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது.

6 மாதங்களுக்கு முன்னர் இங்குவந்த இஸ்ரேல் இனத்தவர்கள் பெருமளவில் இருக்கின்றனர். இவ்வாறு இருக்கையில் ஆளும்தரப்பு தற்போது இஸ்ரேலுக்கு இலவச விசா வழங்கி இருக்கிறது. ஆளும்தரப்பில் இருக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே என கேட்கிறோம்.

அந்தப் பிரதேசத்தில் இருக்கும் முஸ்லிம் மக்களைவிடதமிழ், கிறிஸ்தவபெண்கள்மற்றும் பிள்ளைகள் கையாட்களாகி இருக்கிறார்கள். அந்த பிரதேசம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்பது இராணுவத்தினருக்குப் புரிகிறது. ஆனால் பொலிஸார் எதனையும் கண்டும் காணாமல் செயற்படுகிறார்கள். அவர்களுக்கு மேலிடத்திலிருந்துயாராவது அழுத்தங்களை கொடுக்கிறார்களோ தெரியாது.

இலங்கையில் அறுகம்பை பிரதேசத்தை இஸ்ரேலின் கொலிணியாக்குவதற்கு இந்த ஆளும்தரப்பு இடமளிக்கப்போகிறதா எனக் கேட்கிறோம். அதேபோன்று போர்க்குற்றவாளிகளின் அடைக்கலமாக ஏற்படுத்திக்கொள்ள இடமளிக்கப்போகிறதா என்று கேட்கிறோம். இது தொடர்பில் ஆளும்தரப்புதற்போதாவதுநடவடிக்கைஎடுக்க வேண்டும். ஆளும்தரப்பில் இருப்பவர்கள் இது தொடர்பில் அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என்றார்.

## கனிய மணல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்குமேலாகஅவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ முயற்சித்து வருகிறது.

இதற்கானஅனுமதிகள்இழுபறியில்இருந்த போதிலும் தற்போதைய ஆளும்தரப்பின் கீழ் அவை வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளதாக தெரிய வருகிறது. குறிப்பாகஆஸ்திரேலியநிறுவனம்அகழ்வுக்கு சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்தது. இதற்கு சுற்றுச்சூழல் அதிகார சபை சாதகமான அறிக்கையை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்வி சீர்திருத்தம் ; அதிக விவாதங்கள் வேண்டும்

இலங்கையில் கல்வி சீர்திருத்தம் மீண்டும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், 'என்ன கற்பிக்கப்பட வேண்டும்' என்ற கேள்வி பல தரப்பினரிடையே விவாதமாக எழுந்துள்ளது. பல தசாப்தங்களாகவே கல்வி அமைப்பில் பெரும் மாற்றம் தேவைப்படுவதாகக் கூறப்பட்டாலும், அது பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே வந்தது. கடந்த காலத்தில் மாணவர் இயக்கங்களின் முன்னணியில் இருந்தவர்கள், அப்போது எந்த மாற்றத்தையும் 'நாட்டை பலவீனப்படுத்தும் உலக வல்லரசுவாதச் சதி' எனக் கருதி எதிர்த்தனர். இன்று அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கையில், அந்த பழைய மனப்போக்குகள் பின்புறக் கண்ணாடியில் மறைந்து, எதிர்கால நோக்கில் திட்டமிடும் சூழல் உருவாகவேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இன்றைய உலகில் முன்னேறி நிலைத்திருக்க இலங்கை இளைஞர்களுக்கு தேவையான திறன்களை உருவாக்குவது மிகப்பெரிய சவாலாகும். நாட்டின் சமீபத்திய பொருளாதார, அரசியல், சமூக அதிர்ச்சிகளைத் தாண்டி வந்த நிலையில், 'பாடசாலைகளில் கட்டாயப் பாடமாக நிதி அறிவு சேர்க்கப்பட வேண்டுமா?' என்ற கேள்வி வலுவாக எழுகிறது. நிதி அறிவு இல்லாததால் கடந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க, இளைஞர்களுக்கு சிறு வயதிலிருந்தே பொருளாதார மேலாண்மை திறனை வளர்ப்பது முக்கியம் என பலர் வலியுறுத்துகின்றனர்.

அரசு தற்போது 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு நிதி அறிவை கற்பிக்கும் திட்டத்தை பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பட்ஜெட் அமைத்தல், சேமிப்பு, கடனைப் பொறுப்புடன் பயன்படுத்தல் போன்ற அடிப்படை நிதி திறன்களை இத்திட்டம் உள்ளடக்க உள்ளது.

இத்திறன்கள், தனிநபர்களின் நீண்டகால பொருளாதார நலனிலும், சமூகத்தின் ஒட்டுமொத்த நிலைத்தன்மையிலும் தாக்கம் செலுத்தும். 2021ஆம் ஆண்டில் வெளியான ஆய்வு அறிக்கையின்படி, இலங்கையில் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 89.3% பேருக்கு வங்கிக் கணக்கு உள்ளது. தென் ஆசிய சராசரி 73.6% மற்றும் குறைந்த–நடுத்தர வருமான நாடுகளின் சராசரி 65.8% ஐ விட இது மிக அதிகம். 15–24 வயது இளைஞர்களில் 88.9% பேருக்கு கணக்கு இருப்பது, இளம் தலைமுறை நிதி சேவைகளில் அதிகம் ஈடுபட்டிருப்பதைக் காட்டுகிறது. பெண்கள் கணக்கு வைத்திருப்பதும் 89% ஆக உயர்ந்துள்ளது. இதனால், நிதிக் கல்விக்கான பொது மக்களின் ஆவலும் அரசியல் விருப்பமும் ஒன்றிணைவதற்கு வாய்ப்பு இருப்பது தெளிவாகிறது.

ஆனால், இத்துடன் இணைந்து முக்கியமான குடிமை (சிவில்) கல்வி மற்றும் வரலாறு பாடங்களுக்கு அக்கறை குறைவாகவே உள்ளது. சிலர், தேசிய மக்கள் சக்தி (NPP) அரசு வரலாற்றைப் பாடமாகச் சேர்க்காமல், விருப்பப் பாடங்களின் நீண்ட பட்டியலில் வைத்து 'இயற்கையாக மறைந்து போகச் செய்கிறது' என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இது ஆளும்தரப்பு 'எது வரலாறு?'என்பதில் தெளிவின்றி இருப்பதைக் காட்டுகின்றது. வரலாறு முக்கியம். ஆனால் அது இலங்கைக்கு சிங்கள வரலாறாக மட்டும் நிலைப்படுத்தப்படக்கூடாது. இந்தநாட்டில்பிரிட்டிஷார்வெளியேறுவதற்குமுன்னும் பின்னும் தமிழ், முஸ்லிம் மக்களின் வரலாறுகளும் புறக்கணிக்கப்படாமல் சேர்க்கப்படவேண்டும். அதுவே தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வருகின்றது. அந்த வரலாறுகளை சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்வதற்குப் பயந்து அல்லது அதிலிருந்து ஒதுங்கிச் செல்வதற்காகவே ஆளும்தரப்பு தற்போதைய வரலாற்றுப் பாடத்தை விருப்பத் தெரிவுகளுக்குள் ஒன்றாக்கி புறம்தள்ளுகின்றதோ என்கிற சந்தேகம் நியாயமானதே. இந்த அணுகுமுறை வரலாற்றைத் திரிபுபடுத்தும் சிங்கள பெரும்பான்மை வாதத்திற்குச் சாதகமானதே தவிர இலங்கையின் நீடித்த நிலையான அமைதிக்கான அடித்தளம் அல்ல.

வரலாறு பேசுவதற்கு கடினமான விடயம் என்றாலும், அது அரசியல் தோல்விகள், இன மோதல்கள், கலவரங்கள், கிளர்ச்சிகள், மற்றும் இரத்தப்பொழிவுகள் என பல பாடங்களைக் கொண்ட காலகட்டத்தை உள்ளடக்கியது. இதனை மறந்துவிட்டால், மீண்டும் அதே தவறுகளைச் செய்யும் அபாயம் உண்டு. வரலாறு என்பது புகழ்பெற்ற காலங்களை மட்டுமே நினைவுகூரும் கதை அல்ல; அது கசப்பான உண்மைகளையும் தாங்கும், எதிர்காலத்துக்கான எச்சரிக்கையும் அளிக்கும் கருவி.

அதேபோல், குடிமை கல்வியும் புறக்கணிக்கப்படக் கூடாத ஒன்று. குடிமை கல்வி, ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கவும், குடிமக்களை அரசியல் பங்கேற்பிற்கு தயாராக்கவும் உதவுகிறது. தனது உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிந்த குடிமகன் மட்டுமே அரசின் செயல்பாடுகளை ஆராய்ந்து, நாட்டின் முன்னேற்றத்தில் பங்காற்ற முடியும். இது ஒருபுறம் தேசிய ஒருமைப்பாட்டையும், மறுபுறம் சர்வதேச அளவில் பொறுப்புள்ள குடிமகனாக உருவாகும் திறனையும் வளர்க்கிறது.

இன்றைய உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. தொழில்நுட்ப முன்னேற்றம், உலகளாவிய பொருளாதார சவால்கள், மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவை ஒன்றிணைந்து புதிய தலைமுறையை பல்வேறு துறைகளில் திறமையுடன் முன்னேற வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளன. நிதி அறிவு இந்நிலையில் அவசியமான திறனாக இருந்தாலும், அதே அளவுக்கு குடிமை அறிவும் வரலாற்று அறிவும் முக்கியம். பொருளாதாரத்தில் வல்லவர் ஆனால் சமூக மற்றும் அரசியல் விழிப்புணர்வு இல்லாத குடிமகன், நாட்டின் எதிர்காலத்துக்கு பாதகமாக இருக்கலாம்.

எனவே, கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும் இந்த நேரத்தில், அரசு ஒருதலைப்பட்சமாக சில பாடங்களை மட்டும் முன்னிறுத்தி, சமூக கட்டமைப்புக்கு அடிப்படையான பாடங்களை புறக்கணிக்கக்கூடாது. நிதி அறிவு, குடிமை கல்வி, மற்றும் வரலாறு – இவை மூன்றும் ஒரே அளவில் முக்கியத்துவம் பெறும் வகையில் பாடத்திட்டத்தில் இடம்பெறவேண்டும். இதன் மூலம் மட்டுமே, எதிர்கால இலங்கை – பொருளாதாரத்தில் வலிமையானது, அரசியலில் விழிப்புணர்வுடன் செயல்படும், வரலாற்றை நினைவில் கொண்டும் அதிலிருந்து பாடம் கற்றும் முன்னேறும் – ஒரு சக்திவாய்ந்த நாடாக உருவாக முடியும்.

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த முடியுமா?

## ஆளும்தரப்பிடம் நாமல் எம்.பி. கோரிக்கை

இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலத்தில் சுயாதீன இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிதியமைச்சின் ஆலோசனையை கோர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழு, பிறிதொரு அமைச்சின் ஆலோசனை கோரும் போது அங்கு சுயாதீனத்தன்மை எவ்வாறு பேணப்படும் என்பதை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிதான் நிதியமைச்சின் செயலாளராக தற்போது பதவி வகிக்கிறார். இவர் ஆளும்தரப்புக்குச் சார்பாகவே செயற்படுவார். இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்குஎவ்விதபாதிப்பும்வராது என்று ஆளும்தரப்பால் உத்தரவாதமளிக்க முடியுமா என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த மின்சார சபை சட்டத்தை ஆட்சிக்கு வந்தவுடன் தீயிட்டு எரிப்பதாக தேசிய மக்கள் சக்கி குறிப்பிட்டது.ஆனால் தற்போது அந்த சட்டத்தின் முகப்பு உறையை மாத்திரம் மாற்றி அந்த உள்ளடக்கத்துடன் இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலத்தை ஆளும்தரப்பு சமர்ப்பித்துள்ளது.

இலங்கை மின்சார சபையை 12 கூறுகளாக பிரிப்பதாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. இந்த சட்டத்தில் அது 5 ஆககுறைக்கப்பட்டுள்ளது. மின்சாரசபையின் தனியுரிமையை பாதுகாப்பதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இந்த புதிய சட்டமூலத்தில் குறிப்பிடப்படவில்லை.

இலங்கையில் மின்சார கட்டமைப்பு பாரிய பின்னடைவை எதிர்கொள்வதற்கு மக்கள் விடுதலை முன்னணி முழுமையான பொறுப்புக்கூற வேண்டும்.2005 -2015 வரையான காலப்பகுதியில் முழு நாட்டுக்கும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. கடந்த அரசாங்கங்கள் சம்பூர் அனல் மின் திட்டம், நுரைச்சோலை மின்திட்டம் உள்ளிட்ட பலதிட்டங்களை கொண்டு வந்த போது மக்கள் விடுதலை முன்னணி தான் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது. இன்று மின்திட்டத்தை புதுப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட புதிய சட்டமூலத்தில் சுயாதீன இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுநிதியமைச்சின்ஆலோசனையை கோர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுயாதீனஆணைக்குழு,பிறிதொருஅமைச்சின் ஆலோசனையை கோரும் போது அங்கு சுயாதீனத்தன்மை எவ்வாறு பேணப்படும் என்பதை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.

தேசியமக்கள்சக்தியின்அரசியல்வாதிதான் நிதியமைச்சின் செயலாளராக தற்போது பதவி வகிக்கிறார். இவர் அரசாங்கத்துக்கு சார்பாகவே செயற்படுவார். இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்குஎவ்விதபாதிப்பும்வராது என்று ஆளும்தரப்பால் உத்தரவாதமளிக்க முடியுமா என கேள்வியெழுப்பினார்.

# புலமைப் பரிசில் பரீட்சை ஓக. 5: வகுப்புகளுக்கு தடை

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலதிக வகுப்புக்கள், கருத்தரங்குகள் என்பவற்றுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாண்டு ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. நாடளாவிய ரீதியில் 2,787 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.பரீட்சைக்காகசிங்கள மொழி மூலம் 2,31, 638 மாணவர்களும், தமிழ்மொழி;மூலம்76,313மாணவர்களும் விண்ணப்பித்துள்ளனர். அதற்கமைய இம்முறை 3,07, 959 மாணவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

மேலதிக வகுப்புக்கள் அனைத்தும் புதன்கிழமை(நேற்று)நள்ளிரவு12மணியுடன் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய கருத்தரங்குகள், மேலதிக வகுப்புக்கள், விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்ள முடியாது. இவை தவிர மாணவர்களை ஒன்று கூட்டி ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்டவையும் தடை செய்யப்பட்டுள்ளன.மாறாகஇவ்வாறான செயற்பாடு;களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பரீட்சாத்திகள் 8.30க்கு பரீட்சை மண்டபங்களுக்கு சென்று விட வேண்டும். முதலில் இரண்டாம் பகுதி வினாத்தாள் வழங்கப்படும். காலை 9.30க்கு பரீட்சை ஆரம்பமாகி 10.45க்கு நிறைவடையும். அதன் பின்னர் முற்பகல் 11.15க்கு முதலாம் பகுதி வினாத்தாள் வழங்கப்படும். 12.15க்கு பகுதி ஒன்று பரீட்சை நிறைவடையும். பரீட்சைக்கு தேவையான உபகரணங்கள் மாத்திரமமே மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படும். கைக்கடிகாரத்தை உபயோகிக்க முடியும். ஆனால் நவீன கைக்கடிகாரங்களை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறு பொது போக்குவரத்து சேவை நிறுவனங்களிடம் கேட்டு கொள்கின்றோம். மாணவர்கள் அனைவரும் சிறந்த முறையில் பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என்று நம்புகின்றோம் என்றார்.

# ‘கன்சைட்’ வதை முகாமிற்கான சாட்சிகள் இன்னும் வாழ்கின்றனர்

## உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அறிக்கை

இலங்கையின் நீதிமன்ற ஆவணங்களுடன் வெளிநாடுகளில் உயிர்பிழைத்து வாழும் தமிழர்களின் வாக்குமூலங்களையும் கன்சைட்டில் பணியாற்றிய சிங்களப் படையினரினதும் கடற்படையினரும்ஆதாரங்களையும்கண்ணால்பார்த்தவர்களின் தகவல்களையும் அடிப்படையாக வைத்து இலங்கையில் சிஐடியினரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் கடற்படை தளபதி நிசாந்த உலுகேதன்னஇலங்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லீம்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களிற்கு காரணமாவர்களில் ஒருவர் என்ற முடிவிற்கு நாங்கள் வந்தோம்.என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள்ளது.

நிசாந்த உலுகேதன்ன குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

நிசாந்த உலுகேதென்ன 2010 ஒக்டோபர் மாதம் முதல் டிசம்பர் 2013 வரை கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் தலைவராகப் பணியாற்றினார்.

2025 ஜுலை மாதம் இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்ன இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஆள்கடத்தல் சித்திரவதை பலவந்தமாகக் காணாமல்போகச்செய்தல் மற்றும் நாட்டின் மிக பாதுகாப்பான கடற்படை தளமான திருகோணமலை கடற்படை தளத்தில் சட்டவிரோத படுகொலைகள் ஆகியவை தொடர்பான விசாரணைகளை தொடர்ந்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுபவர்கள் திருகோணமலை கடற்படை தளத்தில் நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த கட்டடத்திற்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர் (இது கன்சைட் என அழைக்கப்பட்டது)

இவர் கைதுசெய்யப்பட்ட பின்னர் வெளியான நம்பகதன்மை மிக்க அறிக்கையிடல்களின்படி ‘கன்சைட்’ எனப்படுவது தடுத்துவைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட சட்டவிரோதமான அனுமதியளிக்கப்படாத பகுதி என்பதை முன்னாள் கடற்படை தளபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

‘கன்சைட்’ என்ற நிலத்தின் கீழ் அமைந்துள்ள சட்டவிரோத சித்திரவதைக்கூடம் ஒன்று உள்ளது என்பதை 2015 முதன்முதலில் சர்வதேசஉண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அம்பலப்படுத்தியிருந்தது

இலங்கையின் நீதிமன்ற ஆவணங்களுடன் வெளிநாடுகளில் உயிர்பிழைத்து வாழும் தமிழர்களின் வாக்குமூலங்களையும் ‘கன்சைட்டில்’ பணியாற்றிய சிங்கள படையினரினதும் கடற்படையினரும்ஆதாரங்களையும்கண்ணால்பார்த்தவர்களின் தகவல்களையும் அடிப்படையாக வைத்து இலங்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லீம்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட பெரும் மனித உரிமை மீறல்களிற்கு காரணமானவர்களில்நிசாந்தஉலுகேதென்னவும் ஒருவர் என்ற முடிவிற்கு நாங்கள் வந்தோம்.

மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக தன்னிச்சையாகவும் சட்டவிரோதமாகவும் தடுத்துவைக்கப்பட்டு கடுமையானசித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பிற வகையான கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சித்திரவதைகளிற்கு உட்படுத்தப்பட்ட உயிர் பிழைத்த தமிழர்களிடமிருந்து விரிவான தகவல்களின் அடிப்படையில் பெறப்பட்டவிரிவான தகவல்களின் அடிப்படையில் சர்வதேசஉண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இந்த நிலத்தடி சட்டவிரோத தடுப்பு மற்றும் சித்திரவதை கூடம் இருப்பதை முதன்முதலில் 2015 இல் வெளிப்படுத்தியது.

பின்னர் அவை 2015 நவம்பர் மாதம் அந்த இடத்திற்குச் சென்ற பலவந்தமாக காணாமல் போதல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பணிக்குழுவால் சரிபார்க்கப்பட்டன.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்திடம் அதன் செயல்பாட்டின்போது குறைந்தது 75-100 நபர்கள் சட்டவிரோதமாக ’கன்சைட் தளத்தில்’ தடுத்து வைக்கப்பட்டதாக மதிப்பிட்டுள்ளது இது 2005 - 2006 முதல் 2012 வரை இடம்பெற்றதாக நம்பப்படுகிறது

இங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் மிகமோசமான மனிதாபிமானமற்ற நிலையில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளிற்குள்ளாக்கப்பட்டனர்.

ஒக்டோபர் 2019இல் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கை கடற்படையின் ’கன் சைட்’ எனப்படும் ரகசிய தடுப்பு முகாமில் சித்திரவதை கட்டாயமாக காணாமல் போதல் மற்றும் பிற கடுமையான மீறல்கள் உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது.

இந்த மீறல்கள் உள்நாட்டுப் போரின்போதும் அதற்குப் பின்னரும் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த அறிக்கை 2008-2009ல் (திருகோணமலை 11’) திருகோணமலை கடற்படைத் தளத்தில் 11 பேர் காணாமல் போனது தொடர்பான இலங்கை காவல்துறையின் கடந்த கால விசாரணையிலிருந்து ஆவண ஆதாரங்களையும் 2008 முதல் 2012 வரை இலங்கை கடற்படையின் பரந்த முறையான மீறல்களைப் பற்றிப் பேசிய நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டது

குறிப்பாக 2008 ஒகஸ்ட் 25 முதல் 2009 பிப்ரவரி வரை கொழும்பில் பதினொருஇளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான ‘திருகோணமலை’ விசாரணையை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கை ஆய்வு செய்தது.

பாதிக்கப்பட்டவர்கள் முதலில் கொழும்பில் உள்ள கடற்படை தலைமையகத்தில் தன்னிச்சையாகவும் சட்டவிரோதமாகவும் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் மார்ச் 2009 இல் கன்சைட்டிற்கு மாற்றப்பட்டனர். இந்தக் குழுவில் ஆறு தமிழர்கள் அடங்குவர் இருவர் சிங்களவர்கள் மற்றும் மூவர் முஸ்லிம்கள்.

இந்த குறிப்பிட்ட வழக்கைத் தாண்டி புலிகள் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அதே இடத்தில் பலர் சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டிருந்ததை - பெரும்பாலும் தமிழர்களை - சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் ஆவணப்படுத்தியது.

அவர்களில் பலர் இன்னும் உயிருடன் உள்ளனர். சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உட்பட அவர்கள் அனுபவித்த கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு சாட்சிகளாக இருக்கலாம்.

ஒக்டோபர் 2010 முதல் டிசம்பர் 2013 வரை கடற்படை புலனாய்வு இயக்குநராகவும் கடற்படை ஆயுத இயக்குநராகவும் நிஷாந்த உலுகேதென்ன பணியாற்றினார்.

2008 முதல் 2012 நடுப்பகுதி வரையிலான காலகட்டத்துடன் நேரடியாக ஒன்றுடன் ஒன்று இணைந்த ஒரு காலம். கடற்படை உளவுத்துறையால் ஏராளமான பாதிக்கப்பட்டவர்கள்உயிர் பிழைத்தவர்கள் கன் சைட் இல் தடுத்து வைக்கப்பட்ட காலகட்டம். நிசாந்த உலுகேதென்னவின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட கடற்படை பிரிவான கடற்படை புலனாய்வு பிரிவினால் பாதிக்கப்பட்ட பெருமளவானவர்களும் உயிர் பிழைத்தவர்களும் கன்சைட் டில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்திடம் வாக்குமூலம் வழங்கியவர்கள் மற்றும் நீதிமன்ற ஆவணங்களின்படி மிகவும் கடுமையான பாதுகாப்புடன் காணப்பட்ட கடற்படை தளத்திற்குள் கடற்படையினர் சுதந்திரமாக சென்று வந்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவினரின் வாகனங்களிற்கு சோதனையிலிருந்து விலக்களிக்கப்பட்டது அவர்களின் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை ஆனால் ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டன.

சட்டவிரோத கடத்தல்கள் தன்னிச்சையாகத் தடுத்துவைக்கப்படுதல் சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல்போதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை வெள்ளை வான்கள் தளத்திற்குள் இலகுவாக கொண்டு போவதை சுலபமாக்கியது.

நாட்டின் கடும் பாதுகாப்பு மிக்க தளத்திலிற்குள் இந்த வெள்ளை வான்கள் எந்த வித சோதனையும் இன்றிச் சென்று வந்தன.

கடற்படை புலனாய்வுத் துறையில் அவரது உயர் பதவி திருகோணமலை கடற்படைத் தளத்திற்கான மிகவும் இறுக்கமான பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் சிஐடியில் அவரது சொந்த அனுமதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிஷாந்த உலுகேதென்ன தனது கட்டளையின் கீழ் நீண்டகாலமாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையாக அறிந்திருந்தார். ஆனால் பொறுப்பானவர்களைத் தண்டிக்க மற்றும் மேலும் மீறல்களைத் தடுக்க பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார்

மீறல்களுக்குப் பொறுப்பேற்காமல் அவர் மே 2019 இல் கடற்படைத் தலைமைத் அதிகாரியாகவும் ஜுலை 2020 இல் கடற்படைத்தளபதியாகவும்நியமிக்கப்பட்டார் இறுதியில் டிசெம்பர் 2022 இல் ஏராளமான கௌரவங்களுடன் ஓய்வு பெற்றார். 17 ஒக்டோபர் 2023 இல் அவர் கியூபாவிற்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டார். 18 நவம்பர் 2024 இல் அவர் ஆளும்தரப்பால் திரும்ப அழைக்கப்பட்டதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.



காலைக்கதிர் Kalaikkathir

## கனிய மணல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து பல்தேசிய நிறுவனங்களுக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இல்மனைட் மணல் அகழபட்டால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னார் மாவட்டத்தின் வாழ்நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களின் வாழ்விடங்களையும் பூர்வீக நிலங்களையும் அழித்து விடும் அபாயம் உள்ளது.

இந்த அழிவை தடுக்கவும், எமது பூர்வீக நிலங்களையும் மக்களின் இருப்பையும் பாதுகாக்கவும் 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர்நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விழிப்புணர்வு போராட்டம் இன்று புதன்கிழமை (6) மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன்போதுகலந்துகொண்ட இளையோர் பல்வேறுவாசகங்கள்எழுதப்பட்டபதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில்விழிப்புணர்வுபேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பேரணி மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மன்னார் நகர சுற்று வட்ட பகுதியை சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து கனிய மணல் அகழ்வுக்கு எதிராக அரசுத் தலைவர்க்கு அனுப்பும் வகையில் தபாலட்டையில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் ஒரு அங்கமாக விழிப்புணர்வு நாடகம், கையெழுத்து பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் நாளை வியாழக்கிழமை (7) இடம் பெற்று இறுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத்தரப்பு வாக்களித்த நிலையில் எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மட்டும் வாக்களித்தது . பொதுஜன பெரமுன,தமிழரசுக்கட்சி , தமிழ் தேசிய மக்கள் முன்னணி ,தொழிலாளர்கட்சி .ஐக்கிய தேசியக் கட்சி ,புதிய ஜனநாயக முன்னணிஆகியஎதிர்க்கட்சிகள்வாக்களிப்பில் பங்கேற்கவில்லை,

அதன்பிரகாரம்சட்டமூலத்துக்குஆதரவாக 121வாக்குகள் அளிக்கப்பட்டதுடன் எதிராக 25 வாக்குகள்அளிக்கப்பட்டன. அதனடிப்படையில் 96 மேலதிக வாக்குகளினால் சட்டமூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

## பயங்கரவாத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைவுகள் நாட்டுக்கு ஏற்பட்டது.

கடந்த ஆளும்தரப்பு பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வர முயற்சித்த போது அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க அதற்கு கடுமையாகஎதிர்ப்புதெரிவித்தார். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாறாக பிறிதொருசட்டத்தை உருவாக்க கூடாது என்று குறிப்பிட்டார் இந்த நிலைப்பாட்டில் தான் நாங்களும் உள்ளோம்.

இந்த நாடு பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பில் சீரழிவதற்கு பயங்கரவாத தடைச்சட்டம்பிரதானகாரணியாகஅமைந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹன விஜேவீரவும், மக்கள் விடுதலை முன்னணியின் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும்பயங்கரவாததடைச்சட்டத்தின் ஊடாகவே கொல்லப்பட்டார்கள். ஆகவே மக்கள் விடுதலை முன்னணியின் .இந்நாள் தலைவர் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இந்த சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்றார்.

## சாகலவிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

## அக்கரைப்பற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற பிரதமரிடமான கேள்வி நேரத்தின் போது இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் சவூதி அரேபியாவின் 1500 மில்லியன்ரூபாநிதியில்அக்கரைப்பற்றுபிரதேச செயலாளர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

எனினும் அந்த வீடுகள் மாவட்டத்தின் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கின் அடிப்படையில் கடந்த 20 வருடங்களாக அந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

அந்த வீடமைப்பு நிர்மாண பிரதேசம் தற்போது பெரும் காடாகி காணப்படுகிறது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மாவட்ட விகிதாசார அடிப்படையில்தான் இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் தொடர்பில் சட்டமா அதிபர் மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உயர் நீதிமன்றத்தினால் அதற்கான தீர்மானம் எதுவும் வழங்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் தெரிவிக்கப்பட வேண்டும்.

அக்கரைப்பற்றுபிரதேசசெயலாளர்பிரிவில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 308 குடும்பங்கள் காணப்படுகின்றன. அந்த குடும்பங்களுக்கு மேற்படி வீடுகள் வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நாடு என சிபாரிசு செய்துள்ளது.

அந்த வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலானநட்புறவைமேலும்வலுப்படுத்தும் வகையில்இந்தவிடயம்தொடர்பாகஆராய்ந்து அவற்றைபகிர்ந்தளிப்பதற்கானபொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக நாடாளுமன்ற குழு ஒன்றை நியமிப்பது பொருத்தமானது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2025இல் வெளியிடப்பெற்றது